# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – **16.1.2012**

நேற்று நள்ளிரவு **(15.1.2012) 12.30** மணியளவில் சென்னை, எழிலகம் வளாகத்தில் அமைந்துள்ள சமூகநல இயக்குநரகம் மற்றும் தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரகம் அமைந்துள்ளக் கட்டிடங்களில் ஏற்பட்ட தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, முன்னணி தீயணைப்பாளர் திரு.அன்பழகன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரமடைந்தேன். இவ்விபத்தில் தேனாம்பேட்டை கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி பிரியா ரவிச்சந்திரன், அசோக் நகர் தியணைப்பு நிலைய அதிகாரி திரு முருகன் மற்றும் தேனாம்பேட்டை தீயணைப்பு நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்பாளர் திரு.பிரபாகரன் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க வருத்தமடைந்தேன்.

பணியிலிருக்கும்போது காலமான திரு.அன்பழகனின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீக்காயங்கள் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி பிரியா ரவிச்சந்திரன், திரு முருகன் ஆகியோர் விரைவில் குணமடையவேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியிலிருக்கும்போது காலமான முன்னணி தீயணைப்பாளர் திரு அன்பழகன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திருமதி பிரியா ரவிச்சந்திரன் மற்றும் திரு. முருகன் ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாயும், சாதாரண காயமடைந்த திரு. பிரபாகரன் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**